# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ ஐப்பசி 1977 ★ இதழ் - 22





## காந்தி இன்றிருந்தால்?

நீண்டகாலம் வாழ்வேன் என்று கூறிய காந்தியடிகள் இன்றிருந்தால் அவருக்கு 108 வயதாயிருக்கும். அவர் தமது வாழ்வில் ஆபிரிக்கா, ஆசியா, ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய நாலு பெரிய கண்டங்களிலும் புகழ் மணக்க வாழ்ந்தவர். மிகத் தூரத்திலேயுள்ள அவுஸ்திரேலியாவிலும் அவருக்கு அன்பர்கள் பக்தர்கள் இருந்தார்கள். காந்தியைப்போல அண்மைக்காலத்தில் அதிமனிதனையும் உலக மனிதனையும் வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தவர் எவரும் இல்லை. இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள் என்னும் மதங்களின் தலைவர்களே காந்தியடிகளின் வாழ்க்கையில் தங்கள் தங்கள் மதக்கோட்பாடுகள் ததும்பி நிற்கக் கண்டு தலைவணங்கினார்கள். காந்தியடிகள் நினைத்தால், அல்லது விரும்பினால் இந்தியாவில் மிகப்பெரிய பதவியை வகித்திருக்கலாம். ஆனால் அவர் ஏழைகளின் நண்பராய் ஏழைகளிலும் ஏழையாய் இனிய வாழ்வு வாழ்ந்ததோடு எல்லோரும் இன்புற்றிருக்கும் வழியையே விரும்பினார். உணவில், உடையில், உறைவிடத்தில் அவரைப்போல ஏழ்மை

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)



மில்க்வைற் தொழிலதிபர் க. கனகராசா அவர்கள் கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவர்களை ஊக்கப்படுத்தி ஆயுதங்கள் உதவி செய்து நந்தாவில் குளத்தை ஆழமாக்க ஆரம்பித்துவைத்தார்.

உ

# கடவுள் வணக்கம்

### திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

திருவாரூர் - திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

நாகத்தை நங்கையஞ்ச நங்கையை மஞ்ஞையென்று
வேகத்தைத் தவிரநாகம் வேழத்தி னுரிவை போர்த்து
பாகத்தி னிமிர்தல் செய்யாத் திங்களை மின்னென்றஞ்சி
ஆகத்திற் கிடந்தநாக மடங்குமா ரூரனார்க்கே.

சிவபெருமானின் திருமுடிமேற் கிடந்த பாம்பினைக் கண்டு கங்கைத்தேவி அஞ்சினாள். அவளின் சாயலைக்கண்டு அவளை மயிலென்று கருதிப் பாம்பு அஞ்சிற்று. அப்பாம்பு தன்னை விழுங்கி விடுமோ என்று சந்திரன் அஞ்சிற்று. அதனால் சந்திரன் சிவபெருமானின் யானைத் தோல் போர்வைக்குள் ஒளித்துக் கொண்டது. சந்திரனின் ஒளியைக் கண்டு மின்னல் எனக்கருதிப் பாம்பு அடங்கிக் கிடந்தது. இவை யாவும் திருவாரூரில் எழுந்தருளியுள்ள வீதிவிடங்கப் பெருமானுக்கு அடக்கமாகும். ★

---




## மடியின்மை

**கருதியவை செய்யுங்கால் சோம்பல் இல்லாமை.**

**மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்
கடிமை புகுத்தி விடும்.**

நல்ல குடியில் பிறந்தவனிடம் சோம்பல்வந்து தங்கினால், அது அவனை அவனுடைய பகைவர்க்கு அடிமையாகுமாறு செய்துவிடும்.

**Abstention from Sloth**

*Should Sloth cling to one who has subjects under him, it would enslave him to his enemies.*

---

கெட்ட காலத்தைத் தாங்குவது கடினம்தான். ஆனால் நல்ல காலத்தைத் தாங்கக் கூடியவர் ஒருவர் இருந்தால் கெட்ட காலத்தைத் தாங்கக் கூடியவர் நூறுபேர் இருப்பர்.

— கார்லைல்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

## காந்தி இன்றிருந்தால்........

யைக் கடைப்பிடித்த உலகமேதை எவரும் இல்லை. அதிகாரத்தில் இருந்த ஆங்கிலேயரை அன்பாலும் இனிய மொழியாலும் இணங்கச் செய்ததோடு அவர்களைப் பணியவும் செய்தவர். அவரின் பொக்கை வாயிலிருந்து வெளிவந்த சொற்கள் வேத வாக்காய் இருந்தன. நியாயவாதிப் படிப்பில் நிபுணராயிருந்த காந்தி உலக ஞானத்தை உணர்ந்து நீதியைக் காணச் சிறையிலே தவஞ் செய்தார். தாம் கண்ட நீதி வழியில் தாம் வாழ்ந்ததோடு உலகத் தவரையும் வாழச் செய்ய முயன்ற ஒப்பற்ற தலைவர் அவருக்குத் தலை வணங்குவோமாக.

**சரிவரத் தன் வேலைகளைச் செய்து உண்பவரே திருப்தியுடன் உண்கிறார்கள்.
அவர்கள் யாவராலும் விரும்பத்தக்கவர்கள்.**

---

### அக்டோபர் மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 8. | சனி | — | ஏகாதசிவிரதம் |
| 10. | திங்கள் | — | பிரதோஷ விரதம் |
| 12. | புதன் | — | அமாவாசை விரதம் |
| 13. | வியாழன் | — | நவராத்திரி ஆரம்பம் |
| 20. | வியாழன் | — | சரஸ்வதி பூசை |
| 21. | வெள்ளி | — | விஜயதசமி |
| 22. | சனி | — | ஏகாதசி விரதம் |
| 24. | திங்கள் | — | பிரதோஷ விரதம் |
| 26. | புதன் | — | பூரணை விரதம் |
| 28. | வெள்ளி | — | கார்த்திகை விரதம் |

---

## திருமணப்பதிவு

மில்க்வைற் செய்தியாசிரியரின் தம்பியாரின் புதல்வியும், அநுராதபுரம் இக்கிரிகொலவை முஸ்லீம் மகா வித்தியாலயத்து ஆசிரியையுமான செல்வி லிங்ககுமாரி சுனக சபாபதி B. A. (Dip - in Hindu Civilization) அவர்களுக்கும், கோப்பாய் விவாகப் பதிவாளர் சு. சுப்பிரமணியம் அவர்களின் மைந்தரும் தோட்டத் தொழிலமைச்சின் ஜனவாசப் பிரிவின் உதவிக் கணக்காளருமான செல்வன் குமாரசாமி அவர்களுக்கும் திருமணப் பதிவு 15-9-77 வியாழக்கிழமை நிறைவேறியுள்ளது.

---

## முயற்சியைப் பற்றிய பழமொழிகள்

1. இளமையின் முயற்சி முதுமையிற் காக்கும்.
2. இளமையில் சோம்பல் முதுமையில் மிடிமை.
3. ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு.
4. ஊழி பேரினும் ஊக்கமது கைவிடேல்
5. கடலைத் தூர்த்தும் காரியத்தை முடிக்க வேண்டும்.
6. நடந்தால் நாடெல்லாம் உறவு. படுத்தால் பாயும் பகை.
7. பள்ளம் இறைத்தவன் பங்கு கொண்டு போகிறான்.
8. பாடுபடாமற் போனால் பயனில்லாமற் போகும்.
9. முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்.
10. வருந்தினால் வாராததொன்றில்லை.

---

**— மேலான ஒழுக்கத்தில் தற்பெருமை இல்லை —**

## அங்கும் இங்கும்

இலங்கையின் புராதன காலத்து மன்னன் இராவணன். அவன் ஈசுவரன் என்னும் பட்டம் பெற்ற சிறப்புடையவன். அவனுக்குப் பின் வரலாற்றுக் காலத்து முதல் மன்னன் விஜயனேயாகவும் அவன் தேவிமார் பாண்டிய இளவரசிகளேயாகவும் புகழ் பெற்றனர். விஜயனில் ஆரம்பித்த இலங்கை மன்னருள் தமிழர் பலர் இடையிடை பரிபாலனஞ் செய்தனர். இறுதியாகக் கண்டி என்னும் செங்கடகல நகரிலே அரசுவீற்றிருந்தவன் தமிழன். ஆங்கிலப் படைகள் அவனே அநியாயமாகச் சிறை செய்த நாள் 18-2-1815 ஆகும். அன்றோடு 2300 ஆண்டுப் பழைமையான இலங்கை மன்னர் பரம்பரை அழிந்தது.


இலங்கையை 1798 ஆம் ஆண்டு முதல் 1948 ஆம் ஆண்டுவரை 150 ஆண்டுகள் பரிபாலித்த ஆங்கிலேயர் இலங்கையின் சுதந்திர விழாப் பொலிவு கண்டு மகிழ்ந்து அன்பளிப்புஞ் செய்தனர். இங்கிலாந்தின் பாராளுமன்றத்தின் பொதுமக்கள் சபையின் தூதுக்குழுவினர் இலங்கைச் சனப்பிரதிநிதி சபைக்கு அன்பளிப்புச் செய்தவை சபாநாயகரின் அலங்கார ஆசனமும் அதிகாரக் கட்டியக் கோலுமாம். இங்கிலாந்தின் உதவிச் சபாநாயகர் மேஜர் யேம்ஸ்மில்னர் என்பார் இவற்றை அன்பளிப்புச் செய்து பேசியபோது ''சபாநாயகரின் வழிமுறைச் செல்வங்களான ஒப்புரவு, சகிப்புத்தன்மை, நேர்மை, நடுவுநிலைமை ஆகியவற்றைக் காத்து வருவீர்களாக'' என்றார். கட்டியக் கோலில் வரையப்பட்ட தாமரை தூய்மை, அழகு பரிசுத்தம் ஆகியவற்றைப் பிரதிபலிப்பன. சேற்றிற் பிறந்த மலர் தலைநீட்டி நிற்பது போல மக்கள் அபிப்பிராயத்தில் ஜனநாயகம் உண்டானது என்பது ஒரு கருத்து. ★

## பழமொழிகள்

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2. அகதிக்குத் தெய்வமே துணை.
3. அகதியின் சொல் அம்பலம் ஏறாது.
4. அகப்பை குறைந்தால் கொழுப்பெல்லாம் குறையும்.
5. அகல இருந்தால் பகையும் உறவாகும்.
6. அகல உழுவதை விட ஆழ உழு.
7. அகழியில் விழுந்த முதலைக்கு அதுவே வைகுந்தம்.
8. அகோர தபசி விபரீத சோரன்.
9. அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை.
10. அக்காள் இருக்கிறவரையில் தான் மச்சான் உறவு.
11. அயல்வீட்டுப் பிள்ளை ஆபத்துக்கு உதவுமா?
12. அச்சமற்றவன் அம்பலம் ஏறுவான்.
13. அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது.
14. அஞ்சனக்காரன் முதுகிலே வஞ்சனைக்காரன் ஏறினன்
15. ஐஞ்சாவது பெண் பிறந்தால் அரசனும் ஆண்டியாவான்.

சிறு பொறியாயினும் துருத்தி கொண்டு ஊதினால் பெருநெருப்பாவது போல் சிறிய தீமை செய்தவனேயாயினும் முகஸ்துதி பெறப்பெற அதிக கொடியவன் ஆகிவிடுகிறான்.

— ஷேக்ஸ்பியர்



## ★ ★ ★ ★ ★ பஞ்சதந்திரம்

முன்னே பகையாளிகளாய் இருந்தவர்களுடைய விசுவாசத்தில் நம்பிக்கை வைத்தலாகாது.

பகைவரை அசட்டை பண்ணினால் அது நோய் போற் பெருகிப் பொல்லாங்கு விளைவிக்கும்.

தாமரை இலையைச் சார்ந்த நீர்த்துளி முத்தின் ஒளியையடைகிறது. சார்பில்லாமல் யாதொரு காரியமும் ஆகிறதில்லை.

விலைமாதர்கள், முகநட்புள்ளவர்கள், பகைவர்கள், சூதாடுகிறவர்கள், இவர்களிடத்தில் மெய் முன்னுக்கு வராது.

மறைந்த பொருள்களைப் பிராமணர்கள் வேதத்தினாலேயும், பசு வாசனையினாலேயும், அரசாங்கம் வேவுகாரரை அனுப்பியும் அறிகின்றார்கள்.

அரசாங்கம் தனக்கு உபயோகமானவற்றை உடனுக்குடன் விசாரிக்காமல் விட்டால் உடனே கெடுதி வரும்.

உடையவன் கண்ணோடாப் பயிர் அழியும்.

பறவைகளில் காகமும், விலங்குகளில் நரியும் மனிதர்களுள் நாவிதனும் மாதர்களிற் பணிப்பெண்ணும் சதுரர்கள்.

வலியவர்களுடைய பெயரினாலே எளியவர்களுக்குக் காரியமாகிறது. ★

## காப்பிய அழகு

தமிழிலுள்ள சிறு காப்பியங்கள் ஐந்தும், பெருங் காப்பியங்கள், ஐந்தும் புத்த சமண தத்துவங்களை இடையிடை கூறுவனவாயினும் தமிழை வளம்படுத்தியுள்ளன. தமிழரின் பழைய நாகரிகத்தைக் கூறுவன. தமிழ்த் தாய்க்கு ஆபரணங்களாய் உள்ளன. தமிழ்த் தாயின் கொலுவில் காப்பியவழகுமிக்குத் தோன்றுமிடங்களை அறிஞர் அகக் கண்ணுற் கண்டு களித்தனர்.

| | | |
|---|---|---|
| தலையில் | — | சூளாமணி |
| மார்பில் | — | சிந்தாமணி |
| காதில் | — | குண்டலகேசி |
| கையில் | — | வளையாபதி |
| இடையில் | — | மணிமேகலை |
| காலில் | — | சிலப்பதிகாரம் |

**— சீலமும் சூழலும் பிள்ளைகளை மனிதராக்குவன —**

## மட்டக்களப்புத் தமிழ்

ஈழத்திரு நாட்டின் வடக்கும் கிழக்கும் தமிழகங்களாகும். வடக்கும் கிழக்கும் மங்கலகரமானவை புனிதமான கருமங்களுக்குத் திசை நோக்கிச் செய்யும் வழக்கமும் எம்மத்தியிலுண்டு. திருமணச் சடங்கு மங்கல கரமானது. கிழக்கு நோக்கியே நடைபெறுவது. எமது திருக்கோயில்கள் பெரும்பாலும் கிழக்கு நோக்கி இருப்பவை. புறவிருள் நீக்கும் ஆதவனும் கிழக்கிலேதான் உதயமாகிறான்.

மட்டக்களப்பு மாநிலத்தின் நீலத்திரைக் கடலோரத்தில் வடக்கே வாழைச்சேனை முதல் தெற்கே பூமுனை ஈறாகவுள்ள ஊர்களின் பெயர்களில் தமிழ்மணம் கமழ்கின்றது. இவற்றின் மணத்தை உலரவிடாமற் காத்தல் இளைஞர் கடனாகும். வாழைச்சேனை, கற்குடா, சிற்றாண்டி, வந்தாறுமூலை, ஏறாவூர், சத்துருகொன்றான், தாண்டவன்வெளி, கல்லடி, உப்போடை, காத்தான்குடி, மண்முனை, செட்டிபாளையம், களுவாஞ்சிக்குடி, பட்டிருப்பு, குறுமண்வெளி, மகிளூர், கல்லாறு, பாண்டிருப்பு, கல்முனை, காரைதீவு, சம்மான்துறை, செங்கற்பட்டி, அக்கரைப்பற்று, திருக்கோவில், சன்னாசிமலை, உகந்தமலை. இன்னும் உள்நாடுகளில் உள்ள ஊர்களும் தமிழ்மணங் கமழ்வன.

## சிறுகீரை

முளைக்கீரையினத்தைச் சேர்ந்த சிறிய கீரையாகையால் இதைச் சிறுகீரை என்பர். இதற்குப் பல பெயர்கள் உண்டு. கண்டி, கம்மை, கழாய்வளம், களாவகம், கன்னவகம், சில்லி முதலிய பெயர்கள் ஆங்காங்கே கூறப்பட்டுள்ளன. இது ஆறங்குலம் முதல் எட்டங்குலம் வரை வளரும். விதைத்து இரு வாரங்களில் பயன் தரும்.

மிகவும் மென்மையான இக் கீரையில் இரும்பு, கல்சியம் ஆகிய சத்துகள் இருப்பதால் இது சூட்டைத் தணிக்கும் தன்மையுள்ளது என்பர். இன்னும் எலும்பு வளர்ச்சிக்கும் கண் குளிர்ச்சிக்கும் இது நல்லது. இதனால் காசம் வாதம் ஆகிய நோய்கள் நீங்கும். பித்தத்தைப் போக்கும் அருங்குணமும் இதற்குண்டு. கல்லீரலைப் பலப்படுத்தும் சக்தியும் இதற்குண்டு.

சிறுகீரை உண்பவர்தம் உடம்பில் விஷங்கள் அதிகமாகத் தாக்கமாட்டா. கண் பார்வைக்கு நல்லகுணம் செய்யும். இக்கீரை காசநோயாளருக்குப் பெரிய வரப்பிரசாதமாகும். அன்றி உண்பவர்க்கு அதிக அழகினையும் இது தருவதாகும்.

கண்புகைச்சல் நேத்திர நோய் காசம்படலம் ரசப்
புண் கிரிச்சுரம் சோபை பொங்குபித்த - மண்பரவு
தாவரவிடங்களும் போம் தழாத் திருவுமுண்டாங்
கூறுசிறு கீரைதனைக் கொள்.

## எல்லார்க்கும் இயன்ற அறம்

யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவிற்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போ தொருகைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரைதானே

— திருமந்திரம்

## பாதயாத்திரை

ஒவ்வொரு மே மாதமும் கோயம்புத்தூரிலிருந்து கால் நடையாக ஒரு குழு பழனிக்குப் புறப்படுகிறது. வழிப் பயணத்தில் கந்தரனுபூதி, கந்தரலங்காரம் போன்ற பக்தியிலக்கியங்கள் கற்பிக்கப்படுகின்றன. பழனியில் ஒரு வாரந் தங்கியிருக்கும் போது இலக்கிய வகுப்புக்களும் சிறப்புச் சொற்பொழிவுகளும் நடைபெறுகின்றன. இவற்றைக் கோயம்புத்தூர் தமிழ்ப் பேராசிரியர் ப. சு. மணியம் நடத்துகிறார்.

கோயம்புத்தூர் பெரியநாயக்கன்பாளையம், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை முதலான இடங்களில் மாதந் தோறும் பெரியபுராணம் திருக்குறள் வகுப்புக்களையும் பேராசிரியர் நடத்தி வருகிறார்.

இவர்களைப் போல இங்குள்ள வித்துவான்கள் புலவர்களும் வகுப்புகளை நடத்திச் செல்லச்சந்நிதி, மாவிட்டபுரம், நகுலேஸ்வரம், நல்லூர் முதலிய இடங்களுக்கும் பாதயாத்திரை செய்துவந்தால் பயனுண்டாகும். இவற்றை ஒழுங்கு செய்ய விரும்புவோர் மில்க்வைற் தொழிலதிபருடன் தொடர்பு கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்ளுகிறோம். ★



## Divine Nectar

By

SWAMI SIVANANDA

1. A guilty mind always suspects others.
2. Watch carefully over your passions.
3. Sacrifice money for the principle.
4. Endure trials patiently.
5. Respect the words of your parents.
6. Do not injure another's reputation.
7. Never try to appear what you are not.
8. Keep your mind away from evil thoughts.
9. Contentment is immense wealth.
10. Luxury is the enemy of peace.

## வன்செயல்

தருமம் இறைவன் கட்டளை

தருமத்தைப் புறக்கணித்தல் இறைவனைப் புறக்கணித்தலாகும்.

தருமம் பலனை நாடிச் செய்வது அல்ல.

தருமம் தருமத்துக்காகச் செய்யப் பெறுவது.

தருமம் வியாபாரப் பொருளல்ல.

தருமம் தெய்விக எழுச்சியால் செய்யப்பெறுவது.

இம்மைச் செய்தது மறுமைக்காகும்.

**— சத்தியமும் நட்பும் சமுதாயத்தை உருவாக்குவன —**



# நாவலர் நன்மொழிகள்

## புராண படனம்

புராணங்களை நியமமாக விதிப்படி படித்தலும், அவைகளுக்குப் பொருள் சொல்லலும், கேட்டலும் சிறந்த புண்ணியங்களாம். புராணம் வாசித்துப் பொருள் சொல்லற்கு இடங்களாவன திருக்கோயில், திருமடம், புண்ணிய தீர்த்தக்கரை, சமயாசாரமுடையவருடைய கிருகம் முதலிய சுத்தஸ்தானங்களாம். மற்றையிடங்களிலே புராணம் படிக்கலாகாது.

ஸ்நானஞ் செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரித்து அநுட்டானம் முடித்துக்கொண்டே, புராணம் படித்தல், பொருள் சொல்லல் கேட்டல் என்னும் இவைகளைச் செய்தல் வேண்டும். ஸ்நான முதலிய நியமங்கள் இல்லாமல் இவைகளைச் செய்யலாகாது.

புராணத் திருமுறையைப் பீடத்திலன்றித் தரையிலேனும், ஆசனத்திலேனும், படுக்கையிலேனும், மடியிலேனும் வைக்கலாகாது. திருமுறைக் கயிறு கீழே விழலாகாது. முறை என்பது புத்தகம்.

புராணத்தைச் சுபதினத்திலே தொடங்கிச் சுபதினத்திலே முடித்தல் வேண்டும். தொடங்குந் தினத்திலும் முடிக்குந் தினத்திலும் புராண மண்டபத்தைப் பட்டுமேற்கட்டி, பூமாலை, வாழை, கரும்பு முதலியவைகளினால் அலங்கரித்தல் வேண்டும். எல்லாருங் கேட்டு உய்யும் பொருட்டுத் திருக்கோயில்களிலே யோக்கியர்களைக்கொண்டு புராணங்களை வாசித்துப் பொருள் சொல்லுவித்தல் மிக மேலாகிய புண்ணியம்.

புதுக்கவி

# ★ அணிகலன் ★

— நல்லை அ. இளங்கோவன் —

வீட்டுக் கணிகலம் மெல்லியர்! ஆண்டகை
வீறுக் கணிகலம் வெற்றிகளாம்!
நாட்டுக் கணிகலம் நல்லவர்! நாட்டினில்
நல்லவர்க் கணிகலம் நாகரிகம்!

ஊருக் கணிகலம் உயர்கலைக் கூடமாம்!
ஊருணிக் கணிகலம் நீர்நிறைவாம்!
பேருக் கணிகலம் பெரும்புகழ்! பேரவைப்
பேச்சுக் கணிகலம் மேற்கோளாம்!

அறிவுக் கணிகலம் நன்மை யமைப்பது!
அரசுக் கணிகலம் நல்லமைச்சாம்!
உறவுக் கணிகலம் ஒற்றுமை! உலகினில்
உடைமைக் கணிகலம் பொறுமையம்மா!

கண்ணுக் கணிகலம் கண்ணோட்டம்! நல்ல
காதற் கணிகலம் கற்புடைமை!
பெண்ணுக் கணிகலம் பேரழகாம்! அவள்
பெண்மைக் கணிகலம் பேரன்பாம்!

பாட்டுக் கணிகலம் பக்கமே எங்கள்ளாம்!
பாவுக் கணிகலம் அணிநலமாம்!
ஏட்டுக் கணிகலம் நல்ல இலட்சியம்!
எழுதுவோர்க் கணிகலம் நடுநிலையாம்!

# கொவ்வையின் குணம்

கொவ்வை சாதாரணமாக வேலிகளில் அடர்ந்து படர்ந்திருக்கும் பசிய கொடி. அதைக் கோவை என்றும் ஆதொண்டை என்றும் கூறுவர். அதன் இலை, காய், பழம் முதலியன நல்ல உபயோகம் உள்ளவை. அக்காலத்தில் சிலேற் என்னும் கற்பலகையைப் பழபழப்பாக மினுக்கவும், கிளிப்பிள்ளைக்கு உணவாகக் கொடுக்கவும் பயன்பட்ட கொவ்வைப்பழத்தின் குணமகிமைகள் அதிகம்.

கொவ்வைப்பழத்தால் வாந்தி, வாயு, இரத்தசோகை, பித்தம், காமாலை, மூச்சு இரைத்தல் முதலியன குணமாகும். இது கபத்தை உண்டாக்குவதும் எளிதில் சமிபாடாகாததும் கவனிக்கவேண்டியது.

கொவ்வைக்காய் உடம்புக்குக் குளுமைசெய்து கபத்தை நீக்கும். பித்தம் இரத்தப் பெருக்கு முதலியவற்றைக் குணமாக்கும். வாயுக் குழப்பத்துக்கு நல்ல மருந்தும் உணவுமாகும். வயிற்றிலுள்ள பூச்சியை எளிதில் போக்குவது.

கோவையிலை பித்தம், பாண்டு, கசம், மூலநோய் முதலியவற்றுக்கு நல்ல மருந்து. விஷகடிகளுக்குக் கொவ்வையிலைச்சாறு கைகண்ட மருந்து. ★

# அபிராமி ஜுவலர்ஸ்

முன்னாள் மில்க்வைற் தொழிலகத்தில் வேலைபார்த்த திரு. மு. செல்வராசா அவர்கள் தாமாகத் தொழில் நடத்துவதற்குத் தொடங்கிய ''அபிராமி ஜுவலர்ஸ்'' என்னும் ஆபரண வியாபாரத்தைக் காங்கேயன்துறை வீதியில் 387ஆம் இலக்கத்துக் கடையில் நாளது 14-9-77 புதன்கிழமை காலை மில்க்வைற் தொழிலதிபர் மங்களகரமாக ஆரம்பித்து ஆசிவழங்கினர். இவர் ஆரம்பித்த தொழில் நன்கு நடைபெறுவதாக. ★

# குளங்கள் வற்றுகின்றன

குளங்கள் வற்றி வரளும்போது அவற்றை ஆழமாக்குவது நன்று. அடுத்துவரும் மழைக்காலத்தில் குளங்களில் அதிக நீர் தேங்கி நிற்கும். அதனால் ஊரவர்களுக்குப் பலவித நன்மைகள் உண்டாகும். குளங்களை ஆழமாக்க விரும்புவோர் எம்முடன் தொடர்புகொண்டால் நாம் ஆயுத உதவி செய்வோம். ★

— பிறர் குற்றம் கருதுபவனுக்கு சாந்தி இல்லை —

# பனம் விதைகள்

முந்திய ஆண்டுகளில் ஆயிரம் ஆயிரமாக அள்ளிஅள்ளிப் பனம் விதை உபகரித்த பள்ளி மாணவ மாணவியரையும் ஆசிரியர்களை யும் அதிபர்களையும் இம்முறையும் பனம்விதைக் காலத்தில் இரு கையும் நீட்டிப் பனம் விதைகள் தருமாறு இரந்து கேட்கிறோம். வரண்ட பிரதேசங்களை வளமுள்ள இடமாக்கிய பெருமை பள்ளிப் பிள்ளைகளுக்கும் இளஞ்சந்ததியினருக்கும் உரியதாகும். அவர்களே பனைவளத்தைக் கண்டுகளிக்கப் போகிறார்கள்.

பனம்விதை தருவோருக்கு நாம் செய்யும் பிரதி உபகாரத்தைத் தந்தவர்கள் அறிவார்கள். நாம் செய்த உதவியை விளம்பரஞ் செய்ய நாம் விரும்பவில்லை.

பனைவளம் என்னும் ஆராய்ச்சி நூல் தயாராகிவிட்டது. பனையைப்பற்றி இதுவரை வெளிவராத அளவில் பெரிய நூல் உங் களுக்கு அன்பளிப்பாகக் கிடைக்கும். அன்றிப் பனைவளம் பெருக்கிய பண்பாளர் என்னும் பட்டமும் சான்றிதழும் உங்களுக்குக் கிடைக்கும்.




# பொய்யாமொழிகள்

(ஆதாரம்: பொய்யாமொழி)

★ மிருகங்களும் நல்ல நண்பர்கள். அவை கேள்வி கேட்பதில்லை, குறை கூறுவதில்லை.

★ பாபமும் பிறவிப் பிணியும் திருவருளா லேயே நீங்குகின்றன.

★ நம்மை நாமே திருத்திக்கொண்டால் உல கம் தானே திருந்திவிடும்.

# விநாயக சதுர்த்தி

மில்க்வைற் தொழிலக முகப்பிலுள்ள விநா யகர் ஆலயத்தில் 16-9-77 வெள்ளிக்கிழமை விநாயக சதுர்த்தி விழா வெகு விமரிசையாக் நடைபெற்றது. தொழிலதிபரின் உபயமாக நடைபெற்ற விழாவில் பெருந்திரளான மக்கள் வழிபாடு செய்தனர். ★

# வீணாகானம்

யாழ்ப்பாணத்துக்கு வீணாகானபுரம் என் றும் ஒரு பழைய பெயருண்டு என்பர். இரா வணன் களத்தில் வீழ்ந்ததும், தருணம் பார்த் திருந்த கந்தர்வன் ஒருவன் அவனுடைய வீணையை எடுத்து ஒலித்ததால் இவ்விடம் பெயர்பெற்றது. இன்று வீணை உருமாறி வயலி னுகை உருவெடுத்தபோதிலும் அதன் ஓசையில் இனிமை இருக்கத்தான் செய்கிறது. மில்க்வைற் தொழிலதிபரின் வேண்டுகோளுக்கிணங்கி வீணை வித்தகர் வேலுப்பிள்ளை சிவஞானம் அவர்கள் நல்லூர்த் திருவிழாக்காலத்தில் பலவிடங்களில் வீணை வாசித்துப் பக்திப் பாடல்களைப் பாடிக் கேட்போரைப் பரவசப்படுத்தினர். இவர் வித்தை வாழ்க. ★

# திறந்தவெளிச் சிறையில் வழிபாட்டு வசதி

யாழ்ப்பாணத்துத் திறந்தவெளிச் சிறை வளவில் உருவாகிவரும் ஆலயத்தில் விநாயகர் திருவுருவத்தையும் முருகன் திருவுருவத்தையும் எழுந்தருளச் செய்வதற்கு மில்க்வைற் தொழிலதிபர் பூர்வாங்க முயற்சிகளைச் செய்து வருகிறார். இத்தலத்தில் ஊர்மக்களும் வழிபாடு செய்வ தற்கு வசதிகள் செய்வதற்கு மேலதிகாரி திரு. தங்கராசா அவர்கள் ஒழுங்கு செய்வதாக உறுதி கூறியுள்ளார். சென்ற 16-9-77 சனிக்கிழமை கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்ட போது தொழிலதிபர் திருக் கோயில் ஒழுங்குகளைச் செய்து வைத்தார். ★

தன்னை ஒறுக்கும் தியாகம் இஃதே இறைவன் மன துக்குத் தந்துள்ள தலைசிறந்த ஞானம். — கார்லைல்

## நவராத்திரி  அன்பளிப்பு

அடுத்து வருகின்ற நவராத்திரி பூசைக்குப் பயன்படும் வகையில்

**சரசுவதிப் படமும், நவராத்திரியும் தேவிவழிபாடும்**

என்னும் நூலும் 50 மில்க்வைற் நீல சோப், 10 நீம் சோப், அல்லது 10 பார் சோப் மேலுறைகளுக்கு வழங்கப்பெறும்.

# ஆனந்தக்குமாரசுவாமி அவர்கள்



### 3. யாழ்ப்பாணத்துக்கு வருதல்

கலாநிதி அவர்கள் தமது மூதாதையரின் பிறந்தக மான யாழ்ப்பாணத்தைப் பார்த்துப் போகவும், இங்கே தமது சீர்திருத்தச் சபையின் கிளை அலுவலகத்தைத் திறந்துவைக்கவும், தமிழ்ப் பெரியார்களைக் கண்டு பழக வும் விரும்பினர். தமது மனைவியார் எதெல்மேரி அம்மை யாருடன் 28-5-1906 இல் இங்கே வந்தார்.

அவருக்கும் அவர் மனைவியாருக்கும் 4-6-1906 இல் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில், சட்டசபைப் பிரதிநிதி சேர். அம்பலவாணர் கனகசபை அவர்கள் தலைமையில், விற்பத்திமான்கள் மத்தியில் மகத்தான வர வேற்புபசாரம் நடைபெற்றது. தமக்குக் கிடைத்த வர வேற்புக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக அவர் நீண்ட நேரம் அவையோர் மகிழப் பேசினர்.

நம்மவர் தமிழ்ப் பண்பாட்டை மறந்து வேற்று நாகரி கத்தை விரும்பிய மனநிலையைத் திருத்துவதற்கான முறை யிற் பேசினர். அவரின் தாயார் எலிசபெத்கிளேபீ நல்ல குடும்பத்திற் பிறந்து லண்டன் பல்கலைக்கழகப் பட்டதாரியாகிப் பண்பாட்டியலை அறிந்து சேர் முத்துக் குமாரசுவாமியையும் அவர்தம் தமிழ்ப் பண்பாட்டினை யும் விரும்பித் திருமணஞ் செய்தவர்.

#### ஆனந்தரின் பேச்சின் சுருக்கம்

''நான் குழந்தைப் பருவம் முதலாக இங்கிலாந்தில் வளர்ந்தமையால் தமிழில் விரிவுரையாற்றக் கூடிய அளவு திறமை எனக்கில்லை. எனவே நான் ஆங்கிலத்தில் பேசு வதைத் தயவுசெய்து மன்னித்துக் கொள்ளவும். என்னை உங்களில் ஒருவனுக நீங்கள் வரவேற்று உபசரிப்பதைக் கண்டு உங்களுக்கு உளமார நன்றி கூறுகின்றேன். உள் ளம் பூரிக்கின்றேன். இந்த நாட்டில் வாழும் தமிழரும் சிங்களவரும் தத்தம் பிள்ளைகளை நல்ல முறையிற் கல்வி கற்பிப்பதற்குப் பாடசாலைகளை ஆரம்பித்தல் வேண்டும். வேற்று நாகரிகக் கோட்பாடுகள் குழந்தைகளின் இதயத் திற் புகுவதற்கு அவசியமில்லை. தாய்மொழிக் கல்வியும் சமயக் கல்வியும் பிள்ளைகளுக்கு மிகவும் அவசியம் என் பேன். எங்கள் நாட்டின் வரலாறு, இலக்கியம், இசை, பண்பாடு ஆகியவற்றை எங்கள் பிள்ளைகள் நன்கறிதல் வேண்டும். நல்ல பாரம்பரியமும் பண்பாடும் வழி வழி யாக நம்அருஞ் செல்வங்களாக நமக்கிருக்கும் போது நாம் நம் குழந்தைகளின் மனத்தையும் மதத்தையும் மாற்ற வேண்டிய தேவை இல்லை. வேற்று நாகரிகமோகம் எம் மிடம் இருத்தலாகாது.

நான் என் ஆங்கில வாழ்வை முடித்துக் கொண்டு இங்கே வந்ததும் இதனை மறுபிறப்பாகக் கருதுகிறேன். என்னை நீங்கள் ஒரு குழந்தையாகக் கொள்ளுதல் வேண் டும். எனக்கு முன் பெரியவர்கள் பலர் இருக்கிறர்கள். நான் பயபக்தியோடு உங்களுக்குச் சொல்லுவதாவது, நாங்கள் எங்கள் தேசியத்தை உருக்குலைத்தலாகாது. மேற் குத்தேய நாகரிகத்தைக் கண்மூடித் தனமாகப் பின்பற்று தலாகாது. நான் உங்கள் தொடர்பை இழந்து மேற்கு நாட்டில் வாழ்ந்தமையால் என் சொந்த நாகரிகத்தைச் சிலகாலம் இழந்திருந்தேன். நான் இனி உங்களிலே ஒரு வனய் இருப்பேன். நாம் சூழலுக்கமைய வாழ்தல் வேண் டும். எங்கள் நாகரிகம் கீழைத்தேசப் பண்பாட்டோடு பிணைந்துள்ளது.


என் தாயார் ஓர் ஆங்கிலமாது அவர் நன்ருகப் படித் தவர். அவர் என் தந்தையாரைத் திருமணஞ் செய்த போது, தமிழரின் கலாசாரத்தை வெகுவாக விரும்பியிருந் தார். எங்கள் கலாசாரம் பாரதப் பண்பாட்டிலிருந்து வந்தது. பாரதப் பண்பாடு மூவாயிரமாண்டுகளுக்கு அப் பால் மூத்தது. மூவாயிரமாண்டுகளுக்கு முன்னர் எழுந்த மூவா இலக்கியங்களும் தத்துவமும் எமக்குக் கிடைத் துள்ளன. இவற்றைவிட ஆழமான உணர்ச்சிப் பெருக்கை நாம் வேறெங்குங் காணவியலாது. இருந்தும் நாம் இந் தியப் பண்பாட்டில் இதயத்தைப் பதிக்காமல் வாழ்கின் ருேம். எமக்கு வல்லரசுகள் வழிகாட்டத் தேவையில்லை. கிரேக்கர் ஒரு சிறிய இனத்தவராயிருந்தும் உலகத்துக்கு அதிகமாக உபகரித்துள்ளனர். அறிவுத்துறையில் குடிபோன உரோமப் பேரரசு சாதித்தவை எவையும் நிலைநிற்கவில்லை. அயர்லாந்து மிகச்சிறியதாயிருந்தும் ஐரோப்பிய நாடு களுக்கு அதிகமாக உபகரித்துள்ளது. சின்னஞ் சிறிய நாடுக ளான டென்மாக், சுவிற்சலந்து ஆகியவை கல்வித்தரத் தில் சிறந்துள்ளன. ஏகாதிபத்தியங்களைப் பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை அவற்ருல் எமக்குப் பயனில்லை.

இதனுல் மேற்கிலிருந்து நாம் அறியவேண்டுவன ஒன்றுமில்லை என்று நான் கூறுவதாகக் கருதவேண்டாம். ஆனுல் நாம் ஒன்றுமறியாத வெறும் காட்டு மனிதரல்லர். நாம் கண்மூடித்தனமாகப் பிறரைப் பின்பற்றி வாழ்தல் நமக்கு அழகல்ல. பூவுலகில் ஒரு மூலையில் உண்டான நாகரிகம் மறுபகுதிகளை மாற்றியமைத்தல் இயலுமா? நாம் எமக்குரிய நாகரிக வளத்தை உடையவர்கள் என்பதை மறத்தலாகாது. ஒருவன் உலகம் முழுவதையும் அடிப் படுத்தி, ஆவியை இழப்பதானுல் வரும் பயன் என்ன? நாம் எமது பண்பாட்டிலும் பாரம்பரியத்திலும் விசுவாச

(தொடர்ச்சி 9ஆம் பக்கம்)

— மேலான எண்ணங்கள் செயலாக வடிவெடுக்கும் —

## சிறுவர் பகுதி



# காந்தியைப் போல் ஆருளர் இனியே ?

வெள்ளைக் கதருடையும்
விஞ்சை புரிதடியும்
கொள்ளைச் சிரிப்புக்குக்
குமிழுங் கடைவாயும்
மெள்ள அருளலைகள்
வீசுந் திருவிழியுங்
கள்ள மகன்றோடக்
காட்டிடுவார் ஆரேயோ.

கிள்ளைப் பனிமொழியும்
கேலிக் குறுமொழியும்
சள்ளை முடியவிழ்க்கும்
சாணக்கிய உரையும்
உள்ளம் நெகிழ்விக்கும்
உபதேச வார்த்தைகளும்
வெள்ளை மனத்திருந்து
வீசிடுவார் ஆரேயோ.

ஒன்றே உலகம்
ஒன்றே மனிதகுலம்
இன்றிங்கு வாழ்பவர்கள்
எல்லாரும் முடிமன்னர்
கன்றுக்குத் தாயாய்க்
கனிந்திங்கு வாழ்ந்திடுவீர்
என்றெம்மை யொன்றாக்கி
இதஞ் சொல்வார் ஆரேயோ.

உண்ணா விரதத்தால்
உலைமூட்டி ஈனங்கள்
எண்ணா விரதத்தால்
இழிவோட்டித் தீவினைகள்
பண்ணா விரதத்தால்
பரமன் அருள் கூட்டும்
அண்ணாவைப்போ லெமக்கிங்
கருள்புரிவார் ஆரேயோ.

— சுரபி

# கும்பாபிஷேகமும் மண்டலாபிஷேகமும்

எழுதுமட்டுவாழ் மருதங்குளம் பிள்ளையார் கோயில் மிகப் பழமை வாய்ந்தது. அங்கேயுள்ள இயற்கைக் காட்சி அற்புதமானது. அதனிலும் அற்புதமான சித்திரத்தேர். அச்சுக்குலையாமல் பழுதுபட்டுள்ளது. பழுதுபட்டுள்ள நிலையிலும் பார்ப்பவர் மனதைப் பறித்து நிற்பது. பிற நாட்டினர் இத்தேரின் சிற்பவேலை நுட்பத்தைக் கண்டால் அந்த இடத்தை விட்டகலமாட்டார்கள்.

விநாயகப் பெருமான் திருவருளால் அங்குள்ள அடியார்கள் ஆசாரசீலராய்ப் பெரியபுராணம் படித்து நிறைவேற்றினார்கள். இக்காலத்தில் இவர்களைப் போலப் புராணம் படிப்பவர் அருகிவருகின்றனர். இவர்கள் யாழ்ப்பாணத்தின் ஏனைய இடங்களுக்கும் சென்று புராணபடனஞ் செய்து மற்றவர்களையும் பழக்கலாம்.

மூர்த்திதலம் தீர்த்தம் என்னும் மும்மைச் சிறப்புமிக்க இவ்வாலயத்தின் கும்பாபிஷேகத்துக்கும் புனரமைப்புக்கும் மண்டலாபிஷேகத்துக்கும் அன்பர்கள் அடியார்கள் உபகரித்தார்கள். மண்டலாபிஷேகம் நாற்பத்தைந்தாம் நாள் 2-10-77 ஞாயிற்றுக்கிழமை ஆகம விதிகளுக்கிணங்க அற்புதமாக நடைபெற்றது. கடஸ்தாபனம், விநாயக வழிபாடு, வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், யாகபூசை, நவோத்தரசத சகஸ்ர சங்க் பூசை, அக்கினிவிபஜனம், தீபாராதனை, சங்கயாக பூசை, திரவியகோமம், திரவிய அபிஷேகம், யாகபூர்ணாகுதி, யாக தீபாரனை, கும்பவீதிவலம், சங்காபிஷேகம், பரிவாரமூர்த்தி அபிஷேகம் தீபாராதனை, வேதபாராயணம், தேவார பாராயணம் யாவும் வைதிகப் பிராமணோத்தமரால் விமரிசையாக நடைபெற்றன. பக்தர்கள் அடியார்கள் அயலவர் என்றித்திறத்தவர் பலர் கண்ணீர் பனிப்ப மெய்மறந்து விநாயகப் பெருமானின் திருவருளைப் பெறுவதற்கு வணங்கி நின்றனர். மத்தியானப் பொழுதில் மகேஸ்வர பூசையில் பெருந்திரளான அடியார்கள் அன்னம் பாலிக்கப் பெற்றார்கள். அதன்பின் பூசலார் நாயனார் புராணபடனமும், மாலைப்பூசையின் பின் பூந்தண்டிகைத் திருவீதியுலாவும் சிறப்பாக நடைபெற்றன. மில்க்வைற் தயாரிப்புக்களுக்கு அன்பர்கள் கொடுத்த ஆதரவினால் தொழிலதிபர் இத் திருப்பணிக்குக் கைகொடுத்து உதவினார்

அடுப்பது சிவன் பாலன்பர்க்(கு)
ஆம்பணி செய்தல் என்றே
கொடுப்பதெவ் வகையுந் தேடி
அவர்கொளக் கொடுத்துக் கங்கை
மடுப்பொதி வேணியையர்
மகிழ்ந்துறை வதற்கோர் கோயில்
எடுப்பது மனத்துக் கொண்டார்
இருநிதி இன்மை எண்ணார்.

பூசலார்நாயனார் — பெரியபுராணம்

ஞானக்கொடையே மிகச்சிறந்த கொடை. ஏனெனில் அது சாவாமையும் நித்தியானந்தமும் அளிக்கிறது.

— சிவானந்தரின் குரல்

— மனத்தெளிவு குழந்தை உள்ளம் போன்றது —

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

**ஆனந்தக்குமாரசுவாமி........**

முள்ளவராயிருத்தல் வேண்டும். எங்கள் பாரம்பரியம் எத்தகையது என்பதை நாமறிதல் வேண்டும். நமது உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றின் முறைகளை நாம் மாற்றியமைத்து வேதனைப்படத் தேவையில்லை. எந்த வெளிநாட்டு அரசாங்கமும் எங்கள் சொந்த வாழ்க்கை முறையை மாற்றியமைக்கத் தேவையில்லை.

எங்கள் நாட்டுப் பழைய மன்னர்கள் மக்களின் சமுதாய, ஆத்மீக வாழ்வுக்காகப் பணி செய்தார்கள். வேற்று நாகரிகமும் வேற்று மதாசாரமும் உள்ள ஆங்கில ஆட்சியாளர் எம்மிலும் தாம் பெரியவர் என்னும் எண்ணம் உடையவர். அவர்கள் எம் வாழ்விலும் தாழ்விலும் பங்கு பற்ற மாட்டார்கள். மின்றோபிரபு என்பவர் இந்தியாவுக்கு வந்தபோது தமது ஆத்மா இங்கிலாந்திலும், உடம்பு இந்தியாவிலும் இருக்கும் என்று கூறியதை நாம் அறிவோம். ஆங்கிலேய ஆட்சியாளர் எமக்குப் பொலிசுக்காரராயும், வழக்கறிஞராயும் கணக்காளராயும் இருக்கலாமேயன்றி அவர் எங்ஙனம் நமக்குத் தந்தையராதல் இயலும்? அவர் எமக்கு இலக்கியத்திலும் சமயத்திலும் வழிகாட்ட முடியாதே. அவர்கள் எம் நாட்டுக்கு வருவதும் போவதுமாயிருக்கிறார்கள். அண்மையில் இலங்கையை விட்டுப் போன பிரதம காரியதரிசி சாதகக்கதை என்றால் என்ன என்று என்னிடம் கேட்டார். இவர் சிங்கள மக்களின் கலாசாரத்தை எங்ஙனம் வளர்க்க முடியும்?

இந்நிலையில் நம் கையே நமக்கு உதவி. மக்களின் சம்மதத்துக்கு எதிராக அவர்களை ஆளுதல் முடியாது. சிங்களவரும் தமிழரும் ஒற்றுமையாக நின்றால் ஆங்கிலேயர் எம்மீது தம் அதிகாரத்தைச் செலுத்த முடியாது. எங்கள் நாட்டுக்குரிய சிங்களத்தையும் தமிழையும் செல்வாக்கு இழக்கச் செய்ய முடியாது.

ஒரு நாட்டின் தேசிய இனம் என்றால் என்ன? அது ஒரு சாதி மாத்திரமல்ல. அதற்கு மொழி, சமயம், இலக்கியம், இசை, கலை முதலியன அமைதல் வேண்டும். வெறும் அதிகாரம் மாத்திரம் அமைந்தால் போதாது. நாம் ஆங்கிலேயனை நடிப்பதால் நமக்கு ஆங்கிலப் புலமை உண்டாகமாட்டாது. இக்காலத்தில் இலங்கையில் நாட்டுக்குரிய வகையில் மொழியபிவிருத்தி உண்டாகவில்லை. மகாவம்சத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தால் மாத்திரம் அபிமானம் உண்டாகுமா? எங்கள் தேசியம் அபிவிருத்தியடைதல் வேண்டும். இதற்கு எங்கள் பாடசாலையிலேதான் நாம் பணியை ஆரம்பித்தல் வேண்டும். பிள்ளைகளை மனிதராக்குவதிலே நம்பணி சிறத்தல் வேண்டும். பிள்ளைகளுக்குத் தேசிய முறையிற் கல்வி புகட்டுவதோடு பெண் கல்வியும் முக்கியமாதல் வேண்டும். சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களில் மகளிர் மாண்பு பேசப்படுகிறது. மங்கையர் கல்விகற்று மாண்புடனிருந்தால் தான் மனையறஞ் சிறக்கவும், எங்கள் பாரம்பரியமும் பண்பாடும் மாறுமலமையவும் உறுதியாகும்.

மைசூர் மாநிலத்தில் பார்ப்பனப் பெண்கள் சென்னைப் பல்கலைக்கழகத்துப் பட்டங்கள் பெறுகிறார்கள். அவர்கள் திருமணத்துக்குப் பின்னரும் தொடர்ந்து படிக்கும் வழக்கம் உள்ளவர். எங்கள் பெண்கள் வெறும் பாவைப்பிள்ளைகளாதலாகாது. அவர்கள் வெள்ளைக்காரிகளாகவும் ஆகாது. அவர்கள் தமிழ்ப் பெண்களாதல் வேண்டும். எங்கள் பாரம்பரியத்தில் பயிற்சியுடையவராதல் வேண்டும். இசைக் கலையை வளர்ப்பவராதல் வேண்டும். வீணையில் பயிற்சி பெறுதல் வேண்டும். பியானோ போன்ற பறங்கி வாத்தியத்தால் எமக்குப் பயனில்லை. நேற்று சங்கீத விற்பன்னர் ஒருவரை என்னிடம் அழைத்து வந்தார்கள். அவர் நான்குமுறை ஆங்கிலச் சங்கீதத்தை ஆரம்பித்தார். ஆனால் அவர் தமிழிசையை அறிந்திருக்கவில்லை. ஆங்கிலச் சங்கீதத்தை நன்றாக அறிந்த நான் அதைப்பற்றிக் குறை சொல்ல விரும்பவில்லை. ஆனால் எங்கள் தமிழிசையின் பெருமையை நான் பாராட்டுகிறேன். உங்களை நான் மன்றாடிக் கேட்டுக்கொள்வது ஒன்றுண்டு. எங்கள் இசைக் கலையை வளருங்கள்.

உங்களிடம் நான் கூறுவது இன்னுமொன்றுண்டு. மேல்நாட்டுக் கல்வித்துறையில் மனத்தை ஒருவழிப்படுத்தி நினைவாற்றலை அதிகரிக்கச் செய்து மனோதத்துவத்தை விசாலித்துக் கொள்வதற்கான யோகக்கலை என்பது இடம் பெறுவதில்லை. மேல்நாட்டுக் கல்விமுறை உயர்ந்ததாக இருக்கலாம். ஆனால் அது மேல்வாரியாகப் பாடங்களைப் படிக்கவைக்கிறதும் குறிப்புக்களை மனனஞ்செய்யத் தூண்டுவதுமாகும். ஆனால் மூளையை விருத்தி செய்வதற்கு எம் மூதாதையர் வகுத்த கல்வித்திட்டம் மேலானது என்று கூறுகின் மிகையாகாது. நினைவாற்றல் எமக்கு வேண்டியதாகும். நினைவாற்றலில்லாத விடத்து ஒன்றை அறிந்து கொள்ள இயலாது. ஒன்றை அறிந்துகொள்ள இயலாத போது நாம் ஒரு மனிதனையே இழந்து விடுகிறோம் என்று கீதை கூறுகிறது.

கல்வியைப் பற்றிக் கூறிமுடிப்பதற்கு முன் இன்னுமொரு அம்சத்தைக் கூறுதல் வேண்டும். அது எங்களுக்குச் சிங்கள மொழியும் தமிழ் மொழியும் பயில இட

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்)




சத்தியம், அஹிம்சை, சகோதரத்துவம் ஆகிய முப்பெரு நெறிகளைக் கடைப்பிடித்து வந்த காந்தியடிகளின் சபர்மதி ஆச்சிரமத்தில் எல்லோரும் தொண்டர்களே. ஒரு நாள் எல்லோரும் தானியங்களைச் சுத்தஞ்செய்து கொண்டிருந்தனர். அவ்வமயம் காந்தியடிகளைக் காணச் சட்டத்தரணிகள் இருவர் சென்றனர். அவர்களை வரவேற்று இருக்குமாறு காந்தியடிகள் பணித்தார்கள். தங்களுக்கும் ஏதாவது வேலை கொடுக்கும்படி வந்தவர்கள் கேட்டார்கள். காந்தியடிகள் சுளகுகளில் தானியங்களைக் கோலி எடுத்துக்கொடுத்துத் தூய்மையாக்குமாறு கூறினார். எங்களை வேலைக்காரரின் வேலையில் ஈடுபடுத்துகிறீர்களே என்று சட்டத்தரணிகள் கேட்டார்கள். நான் என் செய்வேன் தற்சமயம் இந்த வேலைதான் இங்கே இருக்கிறது என்று காந்தியடிகள் கூறினார். ★

---

**— கலைஞரிடம் திருப்தியும் தூய்மையும் இருக்கவேண்டும் —**




## பாலும் மருந்தும்

பாலைக் கொடுத்து நோயைப் போக்கு என்றும், பாலு மாம் மருந்துமாம் என்றும், பாலை வார்த்துத் தலை முழுகு என்றும் பல பழமொழியுண்டு. இவற்ருல் பால் மருந்துக் குரியது என்று முந்தையோர் கண்டுள்ளார்கள் என்று தெரிகிறது. பால் உணவாகவும் மருந்தாகவும் பயன் தருவதை நாம் அறிவோம். அன்றாடைய வாழ்வில் பால் நமக்குப் பலவிதமாகப் பயன் தருகிறது. பாலாடையாக வும், தயிராகவும் மோராகவும், வெண்ணெயாகவும், நெய்யாகவும் அது பயன் தருகிறது.

பசும்பால் சேர்த்துச் செய்யப்பட்ட கரிசலாங் கண் ணித் தைலம் தலை முழுகுவதற்குச் சிறந்தது. அங்ஙனமே கீழா நெல்லித் தைலமும் பயன் தருகிறது. இன்னும் பொன்னுங்காணித் தைலமும் இந்த வகையில் உபயோக மாகின்றது.

கண்டத்துக்கு மேற்பட்ட நோய்களுக்கு நெல்லி வற் றல், நற்சீரகம் வெண்மிளகு ஆகிய மூன்றையும் பாலுடன் சேர்த்து அரைத்துத் தலையில் தேய்த்து ஊறவிட்டு முழு கினுல் குணமாகும் என்பர்.

சித்த வைத்தியர்கள் தயாரிக்கும் செந்தூரம், பஸ்பம் ஆகிய சிறந்த மருந்துகளை உண்டபின் பால் அருந்துதல் பலன் தருகிறது. பால் பலவித மருந்துகளுக்கு ஊட்டம் அளிக்கிறது.

பால் அமுதம் போன்றது. அன்றி மதுரமானது. எனவேதான் சேக்கிழார் பெருமான் தமது பெரியபுரா ணத்தில் அதனை அமுத மதுரப்பால் என்று அருமையாக அருளியுள்ளார். இன்னும் பாலைப் பருகி வருவதால் ஒரு வருக்கு எவ்வித நோயும் உண்டாகாது என்னும் கருத்தில் ''பாலும் நெய்யும் உண்ணலுற்ருர் பாரில் கொடிய பிணி யற்ருர்'' என்று பாடியருளியுள்ளார்.

பாலை மருந்தாகக் கொள்ளும்போது பாற்பத்தியம் எனப்படும். அங்ஙனமே மோரைப் பத்தியமாகக்கொள்ளும் போது மோர்ப்பத்தியம் எனப்படும். இவ்விரு பத்திய முறைகளும் நம் நாட்டிலேயன்றி அரேபியா, எகிப்து முத லிய நாடுகளிலும் உள்ள வைத்திய முறைகளில் உள்ளன.

இன்னும் ஜேமனி இங்கிலாந்து முதலிய மேற்கு நாடு களின் வைத்திய நிபுணர்கள் பால் சிகிச்சை மூலம் பலவித நோய்களை நீக்கலாம் எனக் கண்டுள்ளனர். சமிபாட்டுக் குறை, தொண்டைக்கட்டு, காசம், நீரிழிவு, சீதபேதி, மந்தம், வயிற்றுக்கடுப்பு, குடற்புண், நாடிக் கொதிப்பு, நாடிச் சோர்வு, தூக்கமின்மை, தலைவலி, இடுப்புவலி, கை கால் பிடிப்பு, சொறி, சிரங்கு முதலிய எத்தனையோ நோய் கள் பால் சிகிச்சையால் பறந்துவிடும் என்பர். ★

## வழக்கிலுள்ள வடமொழிகள் சில

| | | |
|---|---|---|
| கலசம் | — | குடம் |
| கலம்பகம் | — | கலவை |
| கலாசாலை | — | கல்லூரி |
| கலாதி | — | குழப்பம் |
| கலாநிதி | — | கலைமகள் |
| கலாபம் | — | மயில் |
| கலாவதி | — | திங்கள் |
| கலி | — | வறுமை |
| கலிங்கம் | — | கண்மருந்து |
| கலியாணம் | — | மணம் |
| கவசம் | — | காப்பு |
| கவி | — | பாட்டு, புலவன் |
| கௌபீனம் | — | கோவணம் |
| கவுரவம் | — | மேன்மை |
| கவுளி | — | பல்லி |
| களத்திரம் | — | மனைவி |
| கற்பம் | — | மருந்து, ஊழிக்காலம் |
| கற்பக விருட்சம் | — | தெய்வமரம் |
| கனம் | — | சுமை, பளு |

## தொழில்வளம்

உலகப்புகழ்பெற்ற விஞ்ஞானமேதை சந்திரவேங்கட ராமன் *(C. V. Raman)* ஒருசமயம் வெள்ளைக்காரர் மத்தி யில் பேசும்போது, ''நாங்கள் குண்டூசி முதல் விமானம் வரை உற்பத்தி செய்வோம்'' என்று கூறினுர். ஆனல் வெள்ளையரின் அடக்குமுறை நிலவியதால் அவர் தொழில் துறையில் உடனடியாக இறங்கவில்லை.

### இலங்கையில்....

இன்று நாடு சுதந்திரமாகி முப்பது ஆண்டுகள் கழிந்து விட்டன. எங்கள் நாட்டில் ஆயிரத்துக்கும் அதிகமான சிறு கைத்தொழிலகங்களிலும் பேட்டைகளிலும் பலவித மான உற்பத்திகள் உருவாகின்றன. இன்னும் பல்லாயிரவர் வேலைவாய்ப்பின்றி இருப்பதால் தொழில் வாய்ப்புக்கு எஸ்மன் விக்கிரமசிங்க ஆலோசனைகள் கூறுகிருர். இவை 17-9-77 தினகரன் பத்திரிகையில் வெளிவந்தவை. இவை சிறிய மூலதனத்தை முன்னிட்டுக்கொண்டு எம்மை முன் னேற்ற முயற்சிசெய்யக்கூடியவை.

1. கையால் கடதாசி செய்தல்
2. சிலிகா மணலைக்கொண்டு கிளாஸ் செய்தல்
3. தேனீ வளர்த்துத் தேன் சேகரித்தல்
4. சாணி மரக்கறிக் கழிவுகொண்டு ஜீவவாயு தயாரித்தல்
5. இறக்குமதியான நூலும் கம்பளியும்கொண்டு நெய்தல்
6. வாழைத்தடல், தண்டுகொண்டு பை, உறைகள் செய்தல்.
7. நாட்டின் பழங்களைக்கொண்டு பழச்சாறு தயாரித்தல்
8. மீண்டும் மரங்களை நாட்டிக் காடுகளை உண்டாக்குதல் இன்னும் பல. ★

— உன்னை நீ பண்படுத்த உலகம் பண்படும் —

## சிவானந்த சீலம்



1. எதுவும் அழிவதில்லை. ஆனால் நிலைமாறுவது உண்டு.
2. பரம அமைதி அளவிடமுடியாத பெருமையுடையது.
3. உள்ளுணர்வை விருத்தியாக்காதவன் மனிதனல்லன்.
4. அழகின் இரகசியம் சீலமும் அறமுமாகும்.
5. ஆசையற்ற உள்ளத்தில் அமைதி பிறக்கும்.
6. நோயாளிக்குச் சேவைசெய்தல் மேலான வழிபாடு.
7. நாவை அடக்கினால் ஆசை அடங்கும்.
8. இலட்சியத்தை விடாதுகொள்ளுதலே சாதனை.
9. வாழ்வு என்பது சரீர சம்பந்தமானது அல்ல.
10. துன்பத்தில் மகிழ்ச்சியடைபவன் உண்மையான வீரன்.

கடவுளிடம் உனது குற்றத்தையும் கயமையையும் ஒத்துக்கொள். அவருடைய மன்னிப்பைக் கோரி நில். உன்னை முற்றாக அவரிடம் ஒப்படைத்துவிடு. வருந்திய உள்ளத்தோடு பச்சாதாபப்பட்டு வழிபடு. அவர் அருளாளர். அவர் உன்னை வாழவைப்பார். ★

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

### ஆனந்தக்குமாரசுவாமி........

மளிக்காத அரசாங்கப் பாடசாலைகளாலும் உபயோகமில்லை என்பேன். இன்று சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழுக்கும் இடமுண்டு. தமிழராகிய எமக்கு அக்கல்வி நிலையம் ஒரு வரப்பிரசாதம் போலிருக்கிறது.

எமக்குப் பல்கலைக்கழகம் ஒன்று வேண்டும். ஆனால் லண்டனில் உள்ளதைக் கொழும்புக்கு அப்படியே மாற்றுவதை நான் விரும்பவில்லை. தமிழருக்குச் சென்னைப் பல்கலைக்கழகமே அமைவானது. அந்த அமைப்பில் பல்கலைக் கழகத்தை அமைத்துக் கொள்ளலாம். நாம் சுதேசி இயக்கத்தை ஆரம்பித்து உள்நாட்டுப் பொருள்களுக்கு மதிப்புக் கொடுத்தல் வேண்டும்.

### சமூக சீர்திருத்த சபை

இருபதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இந்து வாலிபர் சங்கம் அரிய முறையில் சமூகசேவை செய்து வந்தது. அக்காலத்தில் கலாநிதி ஆனந்தக்குமாரசுவாமி கொழும்பில் ஆரம்பித்த சமூக சீர்திருத்த சபையின் கிளையொன்றை யாழ்ப்பாணத்திலும் நிறுவுவதற்கு இளைஞர் பலர் விரும்பினார்கள். அதற்கான கூட்டம் 9-6-1906 இல் திரு. ஏ. மயில்வாகனம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருவாளர்கள் ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை, வீ. காசிப்பிள்ளை முதலானோர் பங்குபற்றிச் சிறப்பித்த கூட்டத்திலே கலாநிதி அவர்கள் சமூக சீர்திருத்தம் என்னும் விடயம்பற்றிப் பேசினார்கள். தமிழரின் பழக்க வழக்கங்களின் பாரம்பரியச் சிறப்பினையும் அவர்தம் உடைகள் அணிகள் பற்றியும் கலாநிதியவர்கள் பேசினார்கள்.

தமிழ்ப் பெரியார்களின் பண்பாட்டுச் சின்னமாய தலைப்பாகை மறைந்து வருகிறது என்று கும்பகோணம் கல்லூரி முன்னாள் அதிபர் ஹென்ஸ்மன் அவர்கள் குறிப்பிட்டார்கள். தாம் பாரதநாட்டில் பெரும் பதவியில் இருந்தபோது அணிந்துவந்த தலைப்பாகை யாழ்ப்பாணத்தில் செல்வாக்குப் பெறவில்லை என்று குறிப்பிட்டார். அதற்கு விடையிறுத்த கலாநிதியவர்கள் ''அப்படியாயின் நாம் எங்கள் தேசீய உடைகளுக்காகப் பிரசாரஞ் செய்தல் வேண்டும்'' என்றார். கூட்டத்தில் இருந்த நாவலர் கோட்டத்து ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணத்தில் நெசவு செய்யப்படும் உடைகளைப் பற்றியும் பிரசாரஞ் செய்தல் வேண்டும் என்று குறிப்பிட்டார். பின்னர் அரியாலையூர் அறிஞரும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னோடிகளுள் ஒருவருமான காசிப்பிள்ளை அவர்களின் பிரேரணையின் வண்ணம் சமூக சீர்திருத்தக் கிளை யாழ்ப்பாணத்தில் நிறுவப்பெற்றது.

### வித்தியா விநோதன்

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் யாழ்ப்பாணத்தில் செந்தமிழ்ப் பரிபாலன சபையார் சிறப்பான சேவை செய்து வந்தார்கள். ஆறுமுகநாவலரவர்களின் தமையனார் புதல்வரும், சைவப்பிரகாச வித்தியாசாலையின் முகாமையாளருமாய த. கைலாசபிள்ளை அவர்கள் சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர் முதலானோர் சபையின் ஆதரவில் 10-9-1906 இல் ஆனந்தக்குமாரசுவாமி தம்பதிகளை வரவேற்று உபசரித்தனர். கைலாசபிள்ளை யவர்கள் தலைமையில் கலாநிதிக்கு வித்தியா விநோதர் என்னும் பட்டமளித்துக் கௌரவித்து அவர் பாரியாருக்குச் சிவஞானபோதம் என்னும் மெய்கண்ட சாத்திரத்தையும் உபகரித்தனர். கலாநிதி யவர்கள் நன்றி தெரிவித்து நீண்ட நேரம் சைவசமயத்தின் பெருமையைப்பற்றிப் பேசினார். அதன்பின் கதிர்காம முதலியாரவர்கள் செந்தமிழ்ப் பரிபாலன சபையின் சேவைகளைப்பற்றிக் குறிப்பிட்டு ஆனந்தக்குமாரசுவாமி அவர்களின் பன்முக ஞானத்தைப் பற்றி விதப்புரை கூறினார்.

ஆதாரம்: கொழும்பு அப்போதிக்கரிஸ் கொம்பனி வெளியீடுகள். சிங்கப்பூர் துரைராசசிங்கம் அவர்களின் வெளியீடுகள். ★

### சமயப்பணி

உணவு, உடை, நிழல், மருந்து முதலியன அளித்தல் மக்கள் தொண்டுகள் எனப்படும். இவற்றை மன்பதைப் பணிகள் என்பர். இவை காயம் என்னும் புண்ணுக்கு மேற்பூச்சுப் போன்றவை. உள்மருந்து அல்லாதவை. உள் மருந்து கொடுக்காமல் மேற்பூச்சு மட்டும் மருத்துவம் ஆகாது. நோய் ஆறாது.

சமயப் பணிகள் உள்மருந்து போன்றவை. அவை அறநெறிகள். நாட்டில் அறநெறிகள் தகுதியாய் இருந்தால் மக்கள் பணியும் தகுதியாய் நடக்கும்.

— அழகரடிகள்

— ஆசையைவிடப் பெரிய துன்பம் இல்லை —

## திருக்கோயிலில் செய்வன தவிர்ப்பன

அரசியலதிகாரி வீட்டு வாசலிலோ, அமைச்சர் வீட்டு வாசலிலோ எவ்வளவு அடக்க ஒடுக்கமாக நிற்கிறோம். ஆனால் ஆலயத்தில் வாயில் வந்தபடி கூப்பாடு போடு கிறோம். எல்லா உலகங்களையும் ஆக்கிப் படைத்துக் காத்து எமக்கு அருள்செய்யும் பரமபதியின் கோயிலில் நடந்துகொள்ளத் தெரியாமல் நடக்கிறோம். பிறர் நகைக்க நடக்கிறோம்.

கோயிலில் ஒருமைப்பட்ட மனத்துடன் வணங்குதல் வேண்டும். விபூதிப் பிரசாதங்களைப் பயபக்தியுடன் வாங் கிக்கொள்ளுதல் வேண்டும். கோயிலில் பிரசாத அமுது கிடைத்தால், உண்டபின் கைகளைச் சுவரிலும் தூணிலும் துடைத்தலாகாது. கோயிலில் படுத்துறங்குதல் மகா பாதகம்.


வழிபாடு முடிந்தபின் கொடிமரத்தின் இப்பால் வலப் பக்கத்தில் வீழ்ந்து வணங்கியபின், ஆங்கமர்ந்து சிறிது நேரம் சிவ மூல மந்திரத்தைச் செபித்தல் வேண்டும். திரு முறைகள் ஓதுவதாயின் மற்றவர்களைக் குழப்பாமல் மெது வாக இனிமையாக ஓதுதல் வேண்டும்.

கோயிலைக் கூட்டித் துப்புரவு செய்யலாம்; பூந்தோட் டத்துக்கு நீர் பாய்ச்சலாம். கோயில் விளக்குகளுக்கு எண்ணெய் வார்க்கலாம்.

திருக்கோயில் வழிபாட்டில் அன்பு, பக்தி, நியதி, அடக்கம் அமைதல் வேண்டும். ஒழுங்காக நின்று வழி பட்டால் எல்லோரும் தூப தீப ஆராதனை அர்ச்சனைகளைக் காணலாம், கேட்கலாம், பயன் பெறலாம். மற்றவரை மறைத்துக்கொண்டு தான் முன்னின்று வணங்குதல் ஆணவ முனைப்பாகும். அது ஆலயத்தில் அடங்கவேண்டியது. முனைப்பாக நிற்றல் ஆண்டவனையே அவமதித்ததாகும். ஆண்டவனின் கடைக்கண் பார்வையே நம்மீது விழுதல் வேண்டும். இறைவனுக்கு நேருக்கு நேர் நின்று வணங் குதல் ஆகாது. ★


## பிராமண இளைஞர் சமாஜம்

இணுவிலிலுள்ள பிராமண இளைஞர் சமாஜத்தினர் தமது வருடாந்தப் பொதுக்கூட்ட வைபவத்தில் சிறப்பு நிகழ்ச்சியாகத் தமக்கெனக் குருகுலப் படிப்புக்கான மண்ட பத்தை 29-9-77 வியாழக்கிழமை பிற்பகல் மில்க்வைற் தொழிலதிபர் சிவநெறிப்புரவலர் திரு. கனகராசா அவர் களைக் கொண்டு திறப்பித்தார்கள். மண்டபத் திறப்புவிழா வோடு கொடியேற்ற வைபவமும் நடைபெற்றது. வைதிக நெறி பற்றிப் பேசிய கனகராசா அவர்கள் குருகுலம் வளரவேண்டிய அவசியத்தையும், அம்முறையிற் பிராமணப் பிள்ளைகள் ஊர்கள் தோறும் குருகுலங்களில் உரிய வித் தையைக் கற்றுச் சைவசமயத்துக்குப் பெரிய எழுச்சியை உண்டாக்குதல் வேண்டுமென்றும் கூறி அறிவுரை மொழி கள் அச்சிட்ட பிரசுரங்களையும் வழங்கினர். குருகுலத் தினருக்கு வேண்டிய புத்தகங்களைப் பாதுகாப்பதற்கான அலுமாரி உதவுவதாகவும் கூறினர். ★



## * யோக சுவாமிகள் அருள் மொழிகள் *

1. கண்ணை மூடினால் போதாது. மனம்மூட வேண்டும்.
2. பரிசுத்தமாய் இருந்து பேசுவதே திருவாசகம்.
3. தன்னைப் பரிசுத்தமாக்கினால் அருள் வெளிப்படும்.
4. பிறரோடு அன்பாய் இருத்தல் வேண்டும்.
5. மற்றவரின் குற்றத்தை மன்னித்தல் வேண்டும்.
6. ஆசைகளை எல்லைக்கு அப்பால் வளர்க்கக் கூடாது.
7. ஆசை உள்ளவனிடம் நீ கடமைப்படாதே.
8. பிறரை ஏமாற்றுகிறவன் தன்னையே ஏமாற்றுகிறான்.
9. ஒருவரோடு ஒருவர் காட்டும் அன்புதான் பூசை.
10. கடவுள் பூவாலும் பேசுவார். நாவாலும் பேசுவார்.
11. துன்பம் நீங்க வேண்டுமாயின் கடவுளைத் தொழு.
12. அருள் மொழியினால் கன்மவினைகள் ஓடும்.
13. அறிவு முடமில்லாது இருப்பவனே அழகன்.
14. பதியைப் பற்றி நிற்கும் விரதமே கற்பு.
15. பதவி ஆசையுள்ளவன் கடமை செய்ய மாட்டான்.



## திருமணங்கள்

மில்க்வைற் தொழிலதிபரின் மூத்த சகோதரன் இரத் தினகோபால் அவர்களின் புதல்வி சௌபாக்கியவதி கம லாம்பிகை அவர்களுக்கும் தேசிய கடதாசி கூட்டுத்தாப னத்தைச் சேர்ந்தவரும் குரும்பசிட்டி ஊரவருமான திரு நிறைச் செல்வன் தி. தெட்சணாமூர்த்தி அவர்களுக்கும் 15-9-77 வியாழக்கிழமை கலட்டி எச்சாட்டி அம்மன் ஆலயத்தில் திருமணம் நடைபெற்றது. மணமக்கள் இறைவனருளால் எல்லாப் பேறுகளும் பெற்று இனிது வாழ்வாராக. ★

மில்க்வைற் தொழிலகத்தின் கணக்காய்வாளரும், இணுவிலூரவருமான திரு. சின்னத்துரை பரராசசேகரம் அவர்களுக்கும், அதே ஊரைச் சேர்ந்தவரான செல்வி முத்துத்தம்பி நாகரத்தினம் அவர்களுக்கும் சென்ற 29-6-77 புதன்கிழமை காலை இணுவில் மஞ்சத்தடி கந்தசுவாமி கோயிலில் திருமணஞ் சிறப்புற நிறைவேறியது. தம்பதிகள் வாழ்வாங்கு வாழ வள்ளி மணாளன் திருவருள் முன்னிற்ப தாக. ★

— திருப்தி உள்ளவனுக்குத் தரித்திரம் இல்லை —

## செம்பரத்தையும் செம்பருத்தியும்

ச. நாராயணசுவாமி, கொக்குவில் கிழக்கு.

செம்பருத்தியென்பது செம்பரத்தைக்கு முற்றிலும் வேறுபட்ட செடியாகும். செம்பரத்தையென்ற சொல்லும் செவ்வரத்தை என்ற சொல்லும் ஒரே செடியையே குறிக்கும். பருத்தியில் வெண்பருத்தி செம்பருத்தி என இரு வகையுண்டு. செம்பருத்தியின் பூ இரத்தச்சிவப்பு நிறமுடையது. வெண்பருத்திப் பூ மஞ்சள் நிறமுடையது. ஆனால் இதன் விதையைச் சுற்றிலும் பச்சை நிறமாக இருப்பதைக் காணலாம். இருவகைப் பருத்திகளின் பஞ்சுகள் வெண்மை நிறமாகவே இருக்கும்.

செம்பருத்தி வடமொழியில் ஜபாகுஸுமம் எனக் குறிக்கப்படும். செவ்வரத்தை ஆங்கிலத்தில் *Hybiscus Rosa* எனவும் *Shoe Flower* எனவும் வழங்கும். ஆனால் வைத்திய சாஸ்திரத்தில் செம்பருத்தியும் செவ்வரத்தையும் கிட்டத்தட்ட ஒரே குணமுடையவை எனச் சொல்லப் படுகிறது. இவைகளின் இலைகளும் மலர்களும் குளிர்த் தன்மையுடையவை எனக்கண்டுள்ளார்கள். முக்கியமான குணங்களில் செம்பருத்தி முதலிடத்தைப் பெறுகின்றது என்றும் சொல்லலாம்.

செம்பருத்தியின் பூ இரத்தச் சிவப்பு நிறத்தையுடையதாகவும் பிரகாசமாகவும் இருக்கும். உலக மாதாவான பரதேவதை அன்னை லலிதாம்பிகை குங்குமப் பூப்போன்ற சிவந்த நிறத்தை யுடையவளென வருணிக்கப் படுகிறாள். காளிதாசனுடைய ஒப்பற்ற தோத்திரமொன்றில் அன்னை "ஜபாகுஸும பாஸுராம்" அதாவது செம்பருத்திப் பூவின் பிரகாசத்தை உடையவள் எனப் போற்றப் படுகிறாள். இன்னும் லலிதாஸகஸ்ர நாமத்தில் "தாடிம குஸுமப்பிரபாயை நமஹ" எனப் பூஜிக்கப் படுகிறாள். அதாவது மாதுளம் பூவின் நிறத்தை யுடையவள்.

செம்பருத்தியின் இலையின் சாறு, இலையை அரைத்த சாந்து தீயினால் உண்டான புண்களையும் காயங்களையும் ஆற்றுவதில் நிகரற்றது என அறிகிறோம். செம்பருத்தியின் பூவின் சாறு கூந்தல் வளர்க்கும் தைலங்கள் செய்ய உபயோகிக்கப்படுகிறது. செம்பரத்தையின் பூக்களும் கூந்தல் தைலங்கள் வடிக்க உபயோகப்படுகின்றன. ★

## நன்னடத்தை என்ன செய்யும்?

ஆத்மீக முன்னேற்றம் அடையச் செய்யும்.
புகழை உண்டாக்கி ஓங்கச் செய்யும்.
உடம்பைக் காத்து ஆயுளை நீடிக்கச் செய்யும்.
கஷ்ட நஷ்டங்களைப் போக்கும்
தீமைகளை நீக்கி நித்தியானந்தத்தைத்தரும்
நன்னடத்தையே ஆத்மீகத்தின் அத்திவாரம்
நன்னடத்தையே ஆத்மீகத்தின் அச்சாணி.
வயது முதிர நற்செயல்கள் அதிகரித்தல் வேண்டும்.

### உழவு மாடு

சிறிய முகம், குறுகிய காது, நீண்ட வால், வளைந்த கொம்பு, உயர்ந்த நெற்றி, மிருதுவான உரோமம் இவைகள் அமைந்த எருது வயலுக்கு நல்ல வரப்பிரசாதம் என்பர். ★

## அருள் விருந்து

ஆதாரம்: தர்மசக்கரம்

1. ஆசைகளை அழித்தால் பிறப்பை வெல்லலாம்.
2. வெறும் நூலறிவு திருவருளைத் தரமாட்டாது.
3. பக்திப் பசி உண்டானால் கடவுளை அடையலாம்.
4. செயல்களைப் பிறர்பொருட்டுச் செய்தல் யாகம்.
5. செய்யுஞ் செயலில் கடவுளைப் பிரதிட்டை செய்யலாம்.
6. வேளாளர் என்பவர் சரீர உழைப்புள்ளவர்கள்.
7. அரசாங்கம் என்பது குடும்பச் சொத்து அல்ல.
8. தர்மம், நேர்மை, வீரம், தவறாமை அரசு லட்சணங்கள்.
9. இன்பத்தை அடைவதற்குப் பிறரைத் துன்புறுத்தலாகாது.
10. அட்டமாசித்திகள் மனதை மயக்கவும் செய்யும்.

## நிலத்தை ஆள்வோர்

குடிகளுக்குத் தலைவன் சாமந்தன்
சாமந்தனிலும் பெரியவன் நிருபன்
நிருபனிலும் பெரியவன் மாண்டலிகன்
மாண்டலிகனிலும் பெரியவன் அரசன்
அரசனிலும் பெரியவன் பேரரசன்
பேரரசனிலும் பெரியவன் சுராட்டு
சுராட்டிலும் பெரியவன் சம்மிராட்டு
சம்மிராட்டிலும் பெரியவன் விராட்டு
விராட்டிலும் பெரியவன் சார்வபௌமன்
சார்வபௌமனைச் சக்கரவர்த்தி எனவும் கூறுவர்.

### தமிழில் வழங்கும் போத்துக்கேய சொற்கள்

| | |
|---|---|
| 1. விருந்தை | 6. நத்தார் |
| 2. கிருதி | 7. தவறணை |
| 3. வாணிஸ் | 8. கரத்தை |
| 4. வெந்தீஸ் | 9. பீரங்கி |
| 5. வத்தை | 10. பகா |

**மில்க்வைற் செய்தி - 22**
பெற விரும்புவோர்
நீல சோப் 10 அல்லது மெடிக்கேட்டட் அல்லது நீம் வாசனை சோப் அல்லது பார்சோப் 2 மேலுறைகள் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

— காமத்தை விட்டவன் கடவுளுக்கு நிகராவன் —



## உயிருள்ள நினைவுச் சின்னம்

திருவள்ளுவர் எச்சம் என்று கூறியது ஒருவரின் பின் எச்சமாய் நின்று அவரின் பெருமையை நினைவுபடுத்து வதையேயாம். நினைவுச்சின்னங்கள் பலவகைப்படும். அறச் சாலைகள், பொதுக்கிணறுகள், சுமைதாங்கிகள், மயானங் கள், வித்தியாசாலைகள், திருக்கோயில்கள், குளங்கள், நந்தவனங்கள் முதலியன நினைவுச் சின்னங்களாம். இவற் றுள் நந்தவனங்கள் அல்லது மரத்தோப்புகள் உயிருள்ள நினைவுச் சின்னம் எனத்தக்கவை.

தனியொருவர் நாட்டிய தனியொரு மரம் சிலசமயம் பெரிய நினைவுச் சின்னமாய் நீண்டகாலம் நிலைத்து நிற் கிறது. சங்கமித்தை நாட்டிய வெள்ளரசமரம் மிகப் பழையது. சிவயோகசுவாமிகள் கிளிநொச்சியில் நாட்டிய மாமரம் பெரிய அளவில் அடர்ந்து வளர்ந்து நிற்கிறது.

காடு கெடுத்து நாடாக்குதல் தேவையைப் பொறுத் தது ஆயினும் காடு உண்டாக்கிப் பயன்பெறுதல் தலையாய முயற்சி. காடு படுதிரவியம் கிடைப்பதோடு காட்டில் பெய் யும் மழை நிலத்திலேயே சுவறி நீர் வசதியை உண்டாக் கிறது. காடுகள் மண்ணரிப்பைத் தடுக்கின்றன.

காடுகள் இயற்கை மூலவளங்களில் ஒன்று. காடுகள் பலவகைப்படும். காடுகளிலுண்டாகும் மரங்களும் பல வகைப்படும். வீடுகட்டுவதற்கு மரமுதவும் காடுகள், விற குக்கான மரந்தரும் காடுகள், மழையைப் பெய்விக்கும் மரங்கள் ஓங்கிய காடுகள், மருந்துக்கு வேண்டிய மூலிகை தரும் காடுகள், மண்ணரிப்பைத் தடுக்கும் காடுகள் எனப் பலவிதமாகக் காடுகளை வகுக்கலாம்.

முற்காலத்தில் எம்முந்தையோர் இடுகாடுகளில் இறந் தவர் நினைவாக மரங்களையே நாட்டினர். வெளிநாட்டு நாகரிகம் இங்கே பரவியபின் இறந்தவர் பொருட்டுக் கல்லறைகள் கட்டும் வழக்கமும் உண்டாயிற்று. ஆனால் பாலைவனமாயுள்ள இஸ்றேல் நாட்டில் இறந்தவர் பொருட்டு மரங்களை நாட்டும் வழக்கம் உண்டானபின் அந்நாடு சோலைவனமாக மாறியுள்ளது. செல்வங் கொழிக் கின்றது. ருசிய நாட்டில் உருவாகும் புதிய நகரங்களைச் சூழப் பெரிய மரச்சோலைகள் உருவாகின்றன. பசுமையற்ற கொங்கிறிட் வீடுகளில் வாழ்கின்ற மக்கள் குளிர்ச்சியை அநுபவிப்பதற்குப் பசுஞ் சோலைகளை நாடுகின்றனர். குளிரான ருசிய நாட்டிலேயே மரச்சோலை தேவையாகின்ற போது வெறும் வெப்பவலயத்தில் வாழும் நாம் நம் சூழலைக் குளிர்ச்சியாக்க நினைக்கின்றோமில்லை. காடு கெடுத் தலில் தீவிரமாக ஈடுபடுகின்ற நாம் அதேவேளையில் விறகுத் தட்டுப்பாட்டினால் வெகுவாக வருந்துகிறோம். விரைவாக வளர்ந்து விறகு தரும் மரங்களை வரிசையாக நாட்டுவது அவசியமாகிறது. புராதனப் பெருமை வாய்ந்த பாரசீகம் என்னும் ஈரான் நாட்டில் வனந்தரப்பகுதி பரவிவருகிறது. பிலிப்பீன்ஸ் நாட்டினரைப் போல ஆங்கிலேயரும் மரம் நாட்டும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுச் சூழலைப் பாது காப்பதற்கு ஆண்டுதோறும் மரம்நாட்டும் பணியில் ஈடு பட்டு இரண்டுகோடி மரங்களை உண்டாக்கத் திட்டமிட் டுள்ளார்கள். நாங்களும் பின்பற்றுவோமாக. ★

## நந்தாவில் குளத்தால் நன்மையுண்டாகும்

யாழ்ப்பாண நகரத்தில் வெள்ளப் பெருக்கு இனிமேல் குறைவதற்கு நந்தாவில் குளம் உதவியாகும். கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவர்கள் மில்க்வைற் தொழிலதிபரின் உதவியுடன் குளத்தை ஆழமாக்கி அதிகநீரைத் தேக்க வழி செய்வதால் இனி அங்கிருந்து கரைபுரண்டு வரும் வெள்ளம் நகரை நோக்கமாட்டாது.

மாணவர் மத்தியில் முன்னாள் ஆசிரியர் வி. சி. இராம நாதன் அவர்களை ஊக்கப்படுத்தி ஆழமாக்கும் வேலையை ஆரம்பித்து வைத்தார். குளங்கள் ஆழமாக்கப்பட வேண் டிய அவசியத்தையும் அவற்றால் உண்டாகும் நன்மை களையும் மில்க்வைற் தொழிலதிபர் விளக்கிப்பேசி மாண வர் செய்திட்டத்தை வாழ்த்தினர்.

நீர்ப்பாசனத் திணைக்களத்துப் பொறியியலாளர் திரு. த. குணசேகரம் அவர்கள் சிறப்புச் சொற்பொழி வாற்றி செய்திட்டத்தை விரிவாக விளக்கினர். அங்குக் கூடியிருந்த கல்லூரி அதிபர் திரு மா. மகாதேவா, கிராமசபை விசேட ஆணையாளர் திரு. என். புஸ்பராசா, கிராமசேவகர் முதலானோர் ஆசிகூறினர். மாணவ தலைவர் திரு. க. சுதாதரன் அவர்கள் நன்றியுரை கூறினர்கள். ★

## மதங்களின் பொதுப் போதனை

கொலை செய்யாதீர்
பிறரைத் துன்பப்படுத்தாதீர்
அயலானை நேசியுங்கள்
படைப்புக்கள் யாவும் கடவுளின் தோற்றங்களே

★ ★ ★

பொருளாதார லாபத்துக்காக நேர்மையைக் கைவிடாதீர்.
சந்தேகம் உண்டாகும் போது பெரியவரிடம் கேளுங்கள்.
பின்னால் வெட்கப்படக்கூடிய வேலைகளைச் செய்யாதீர்.
பிராணிகளைத் துன்பத்தினின்றும் விடுவியுங்கள்.

— நூலறிவிலும் நுண்ணறிவு பெரிது —

## ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களுக்கு

# இந்தி[illegible]ாவிலிருந்து ஒரு வேண்டுகோள்

### [illegible]ழத்து இலக்கியம் பரவிட உதவுங்கள்

[illegible] நண்பர்களே,

[illegible]ந்தியாவின் தலைநகரிலே உள்ள தில்லிப் பல்கலைக் [illegible]தில் தமிழ் முதுகலை (எம். ஏ.) பட்டப் படிப்புக் [illegible] வாய்ப்பு இப்போது ஏற்பட்டுள்ளது. இதிலே பெருமளவு பொறுப்பு ஏற்றிருந்த நான், வெளிநாட்டுத் தமிழ் இலக்கியத்தையும் இந்த எம். ஏ. பாடத்திட்டத்தில் ஒரு பகுதியாகச் சேர்த்துள்ளேன்.

தாய்த் தமிழகத்துக்கு வெளியே படைக்கப்படும் தமிழ் இலக்கியத்தில் ஈழத்து இலக்கியம் கணிசமானது என்பதை அறிவீர்கள். ஈழத்து இலக்கியத்தோடு எமக்கு நீண்ட தொடர்பு இருந்து வந்ததையும் நீங்கள் அறிவீர்கள்.

ஈழத்துக்கு வந்த காலங்களில் எமக்கு அறிமுகமானவர்கள் அவ்வப்போது, சில புத்தகங்களை எமக்கு அனுப்பி வந்துள்ளார்கள். இருப்பினும் அரியவையும் புதியவையுமான சில புத்தகங்கள் எமக்குக் கிடைக்காமல் உள்ளன. அவையும் இலக்கிய இதழ்களும் கிடைத்தால், என்னுடைய பணி, இங்கே மேலும் பயனுடையதாக அமையும். அல்லவா?

இதற்குத்தான்,

எழுத்தாள நண்பர்களே, உங்களின் இனிய உதவியை நாடுகிறேன். இதுவரை ஈழத்தில் வெளிவந்துள்ள தமிழ்ப் புத்தகங்களின் விபரப்பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்தால் எமக்கு அனுப்புங்கள். ஈழத்துத் தமிழ் இலக்கியத்தைப் பற்றிய மதிப்பீடுகள், திறனாய்வுகள் கிடைத்தாலும் அனுப்புங்கள். நீங்கள் அண்மையில் எழுதியுள்ள புத்தகங்களைப் பற்றியும் வேறு தரமான புத்தகங்களைப் பற்றியும் விபரங்கள் தாருங்கள். இங்கே இந்தியாவில் கிடைக்காத புத்தகங்களை அவரவர் எமக்கு அனுப்பி உதவினால் உங்கள் அன்பினைப் போற்றிக் காப்பேன் அதனை இங்கே ஈழத்து இலக்கியம் பரவுவதற்குச் செய்த பெருந்தொண்டாக ஏற்று உவகை கொள்வேன்.

தொடர்பு கொள்ளக்கூடிய முகவரி

**Dr. Salai Ilanthiraian**
Dept. of Tamil
University of Delhi
Delhi 7

## தண்ணீர்

தண்ணீர் மேலிருந்து மழையாகப் பூமியை அடையும் போது புனிதமாக வருகிறது. இங்கே பலவித அழுக்குகளுடன் கலந்து அசுத்தமடைகிறது. நாம் அசுத்தநீரைப் பருகுவதால் வாந்திபேதி, விஷசுரம், வயிற்றுக்கடுப்பு, பேதி முதலிய நோய்கள் உண்டாகின்றன. உண்ணுங்கால் நீர் சுருக்கி உண்ணல் வேண்டும் என்பது விதி. அதாவது எந்த நீரையும் கொதிக்கவைத்து ஆறியபின் வடித்துக் குடித்தல் நல்லது.

*Continued from issue No. 21*

# *Natesan on Thirukkural*

Thiruvalluvar, the Author of this work, lived in an age which has a special significance in the history of the Tamil people. It was the golden age of Tamil Literature known as the Sangam Era-and it was also the age during which the impact of Budhism and Jainisim which had made a heavy onslaught against the Vedic Religion in North India was beginning to be felt in South India. Both these creeds strongly denounced the Vedic sacrifices and both repuditated the religious hierachy of the Bramins. Budhism especially made a vigorous attack on caste, and preached a Dharma which was not based on birth. This Gospel made a powerful appeal to the people in the North India, where the code of Manu based on the Cathur Varna (four fold caste) had in course of time enmeshed moral and spiritual conseptions in a tangle of caste observances and ritual. In the Tamil country, there had been already an infusion of aryan culture, and the authority of the Vedas was generally accepted. But the religion followed by the people was, in the main, derived from the ancient faith of their Dravidian ancesters which expressed itself in Bakti or devotion to God worshiped in His aspects of Grace in temples. Caste as an instititution based on different occupations existed among the Tamil people; but it did not confirm to the doctrine of Chatur-Varna, which could not be fitted into the conditions of Tamil Society. This doctrine remained only a theory in the Tamil Country, where moral conduct was considered more important than birth. The idea that persons following the humblest occupations could rise to the fullest moral and spiritual stature had always prevailed in the Tamil country. According to a popular tradttion, Thiruvalluvar himself belonged to the lowliest of casts; yet he was venerated as sage by the highest in the land.

## இவ்வாறு சொன்னவர் யாவர்?

1. சத்தியத்தை அடைய அகிம்சை நெறி வேண்டும்.
2. அடக்கத்திலுஞ் சிறந்த ஆக்கம் வேறில்லை.
3. பொய் வதந்திகளால் சமுதாயம் கெடுகிறது.
4. அடக்கம் இல்லாமல் பண்பாடு இல்லை.
5. தனக்குத் தெரிந்தவற்றைப் பேசினால் அமைதிநிலவும்.
6. உண்மையின் புன்முறுவலே அழகு.
7. கருணை கடவுளைக் காட்டக் கூடியது.
8. உடல் நலமே எல்லா உரிமைகளிலும் மேலானது.
9. எல்லா அறங்களும் உண்மையைப் பின்தொடர்வன.
10. உழைப்பின்றி உண்பவர்கள் திருடர்கள்.

(விடைகள் வேறிடத்தில்)

— சமயக்கோட்பாடு வேற்றுமையை வளர்க்கலாகாது —

## மின்சாரம்

இன்று நாடு நகரம் எங்கும் மின்சார மயமாயுள்ளது. விளக்கு எரிக்கவும், விசிறி வீசவும், நீர் இறைக்கவும், உணவு சமைக்கவும், உடுப்புத் தைக்கவும், நெசவு செய்யவும், நெற்குத்தவும், மாவரைக்கவும், வானொலி பாடவும், சினிமா காட்டவும், தெருவெளிச்சம் ஏற்றவும் இன்னும் பலவிதமாகவும் மின்சாரம் எமக்குப் பயன்படுகிறது.

## அன்னம்

அன்னத்தை நிந்திக்கக் கூடாது;
அதுவே விரதம்
அன்னத்தை எறியக் கூடாது;
அதுவே விரதம்
அன்னத்தை மிகுதியாக உண்டுபண்ண வேண்டும்;
அதுவே விரதம்
வீட்டுக்கு வந்தவர் யாராயிருந்தாலும் மறுக்கலாகாது;
அதுவே விரதம்
ஆகையால் எந்தவிதமாகவேனும்
அதிக அன்னத்தை அடையவேண்டும்.

— தைத்திரியோப நிடதம்

## அறிஞர் அன்னகாமு

அறிஞர் அன்னகாமு அவர்கள் மதுரை காந்திக் கிராமக் கல்லூரியில் தமிழ்த்துறையிற் பணி புரிந்தவர், கிராம மக்களோடு நன்கு பழகியவர், அவர்தம் எழுதாக் கவிகள் பலவற்றை எழுதி வெளியிட்டவர், பூமிதானப் பணியில் ஈடுபட்டவர். இத்தகைய பெரியார் இன்று எம்மத்தியில் இல்லை. அவர் 21-7-77 இல் இயற்கை எய்தியமை கேட்டு வருந்துகிறோம்

## இவ்வாறு சொன்னவர் யாவர்? சொன்னவர்

1. சிங்செள 2. திருவள்ளுவர் 3. காந்தியடிகள்
4. இராஜாஜி 5. பேனட்ஷா 6. தாகூர்
7. காந்தியடிகள் 8. அமியல் 9. வால்மீகி
10. காந்தியடிகள்

## அருள்நெறி வாழ்க்கைக்கு வேண்டிய நெறிமுறைகள்

| | | |
|---|---|---|
| வாழ்க்கைப் போராட்டத்திலும் | — | கடவுள் பக்தி |
| செல்வத்திலும் | — | பணிவுடைமை |
| வறுமையிலும் | — | நேர்மை |
| சினத்திலும் | — | பொறுமை |
| பகைமையிலும் | — | அன்புடைமை |
| தோல்வியிலும் | — | விடாமுயற்சி |
| ஏமாற்றத்திலும் | — | புன்சிரிப்பு |
| துன்பத்திலும் | — | தளரா நெஞ்சம் |
| தனிமையிலும் | — | தூய்மை |
| வேண்டியபோதும் | — | வெஃகாமை |
| இன்னா செய்தாருக்கும் | — | இனியவே செய்தல் |

(ஆதாரம்: அருள்நெறித் திருக்கூட்டம் குன்றக்குடி)

கமக்காரர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்
மண்ணை வளம்படுத்தி
அதிக விளைச்சலைத் தருகிறது.
NEEMIA
FERTILISER

நீமியா உரம்
නීමියා පොහොර
A MILKWHITE PRODUCT
MWS மில்க்வைற்
இது ஒரு மில்க்வைற் தயாரிப்பு.

## நவராத்திரி விழா



பாரதப் பண்பாட்டில், வந்து, தமிழர் வாழ்வை மலர்த்தி நிற்கும் விழாக்கள், பண்டிகைகள் யாவும் கலைவிழாக்களேயாகும். காவியக் கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, சித்திரக்கலை, இசைக்கலை, நாடகக்கலை, நாட்டியக் கலை, கட்டிடக்கலை, முதலிய கலைகளுக்கெல்லாம் எங்கள் திருக்கோயில்கள் ஆதாரமாயுள்ளமை போன்றே எங்கள் விழாக்களும் கலைகளின் விளக்கமாகவுள்ளன. ஆண்டுதோறும் புரட்டாதி மாதத்தில் ஒன்பது நாள் இரவு பகலாக நடைபெறும் இவ்விழா, வாழ்வின் வெற்றி விழாவாகும். வாழ்வின் விளக்கத்துக்கு ஆதாரமான வலிமை, செல்வம், ஞானம் ஆகியவற்றை இறைவனின் அருளாகிய ஆற்றல் மலைமகள், அலைமகள், கலைமகள் ஆகிய தேவியரை அதிட்டித்து வழங்குவதாகும். எமது சிதைந்த வாழ்வு சீர்ப்பட அம்மையின் இன்னருள் சுரப்பதாக. வீடுதோறும் கலைகள் விளக்கம் பெறுவனவாகுக.

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர்; ''சிவநெறிப் புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்.
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் 1-10-77